Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No STC.NO.923/2021, Cr.No.425/2019, Tirupathur Taluk PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | |
|---|---|
| பெயர் | பெருமாள் |
| வயது | 76 |
| தந்தை/கணவர் பெயர் | கண்ணுக்காரகவுண்டர் |
| கிராமம் | பூசாரியூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | தலைமைக் காவலர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 05th day of November 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 09.10.2019 அன்று சுமார் 11.00 – 11.30 மணியளவில் நாட்றம்பள்ளியிலிருந்து முன்னாள் MLA–வை பார்ப்பதற்காக நான், மேகலா, சின்ன அண்ணன் உள்ளிட்ட 8 முதல் 9 நபர்கள் மினி வேனில் விஜய் வித்யா மந்திர் பள்ளி அருகே சென்று கொண்டிருந்தபோது, இடது பக்கமாக திரும்பும்போது பின்னால் வேகமாக வந்த தனியார் பேருந்து எங்கள் மீது மோதியது. மேற்படி விபத்தில் நாங்கள் சென்ற வாகனம் Upset ஆகிவிட்டது. விபத்தில் எனக்கு நெற்றி, இடது கை மற்றும் காலில் காயம் ஏறுபட்டது. என்னுடன் வாகனத்தில் வந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கும் காயம் ஏற்பட்டது. எங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்திய தனியார் பேருந்தின் பதிவெண் ஞாபகமில்லை. பின்னர் அந்த வழியாக சென்றவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் விபத்தில் காயமுற்ற எங்களை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். மேற்படி விபத்தில் ஒரு பெண் நபருக்கு முதுகில் பலத்த காயம் ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் ஓய்வு பெற்ற காவலர் என்பதால் எனக்கு போக்குவரத்து விதிமுறைகள் தெரியும். சம்பவத்தின் போது நாங்கள் திருப்பத்தூரில்

இருந்து சேலம் ரோட்டில் பயணித்தோம் என்றால் சரிதான். அப்போது எங்கள் இடது புறமாக பின்னால் ஒரு தனியார் பேருந்து வந்தது என்றால் சரிதான். இடதுபுறம் திரும்ப வேண்டும் என்றால் இன்டிகேட்டர் போட்டு தான் திரும்ப வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு செய்யவில்லை என்றால் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். நாங்கள் வலது புறத்திலிருந்து இடது புறமாக இன்டிகேட்டர் போடாமல் திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, நாங்கள் இடது புறமாக தான் சென்று கொண்டிருந்தோம். காவல்துறையினர் நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது விசாரித்தார்கள். காவல்துறையினருக்கு நாங்கள் தான் விபத்து ஏற்பட்ட விவரத்தினை கூறினோம். நான் புகார் வாக்குமூலம் அளிக்கவில்லை. என்னிடம் காவல்துறையினர் விசாரித்து எழுதிக் கொண்டார்கள், அதில் நான் கையொப்பம் செய்தேன். அதன் அடிப்படையில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கூறுவது போல் விபத்து ஏற்பட்டிருந்தால் நாங்கள் சென்ற வாகனத்தில் பின்பகுதியில் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் பின் பகுதியில் சேதம் இல்லாததால் மேற்படி விபத்து ஏற்பட்டு இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து எங்களின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>நீதிமன்றக் கேள்வி:–</u>**

எங்கள் வாகனத்தின் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநரை எங்கள் வாகனம் Upset ஆனதால் நான் பார்க்கவில்லை.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.11.05 12:41:55 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.